திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மாணவர்களின் தரம் குறைந்திருக்கிறது என்ற நிலையை உணர்ந்ததற்குப் பின்னால் இப்படிப்பட்ட திரைக்காட்சிகளின் மூலம், ஒழுக்கத்தையும், நாணயத்தையும், தேசப் பொதுமக்கள் சேவைக்கு மதிப்பளிக்கக்கூடிய நடத்தையைப் போதிக்கக்கூடிய படங்களைத் தேர்ந்தெடுத்து, அல்லது அரசின் சார்பாக உருவாக்கி, அவைகளைக் காண்பிக்க அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சில உயர்நிலைப் பள்ளிகளிலே, இப்படிப்பட்ட புரஜக்டர்கள் எல்லாம் இருந்து வருகின்றன. அங்கே பள்ளி சம்பந்தமான பாடங்களைக் கற்பதற்கு, ஓரளவு தமிழகக் கல்வி இயக்கத்திலே சிலபல படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. பள்ளி சம்பந்தமான படங்களை வெளிநாட்டுத் தூதரகங்கள் ஏராளமாக வைத்திருக்கிறார்கள். எந்த எந்த பள்ளி அவற்றைப் போட விரும்புகிறார்களோ, அவர்கள் கேட்டால், தூதரகங்கள் தரத் தயாராக இருக்கிறார்கள். பல பள்ளிகள் அவைகளைப் பெற்று, மாணவர்களுக்குக் காட்டி, பயன்படுத்தி வருகிறார்கள்.

Houses for Tourists in Ootacamund

* 555 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal to construct rented houses in Ootacamund for tourists of middle income groups; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) உதகமண்டலத்தில் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்காக வாடகை வீடுகள் கட்டும் தனிப்பட்ட செயற்குறிப்பு ஏதும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் இல்லை. எனினும், உதகமண்டலத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சுற்றுலா மாளிகை ஒன்று உள்ளது. இதில் ரூ. 10.5 லட்சம் செலவில் 24 அறைகள் கொண்ட புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டுள்ளது. இக் கட்டடம் நடுத்தர வருமானத் தொகுதியைச் சேர்ந்தவர்களுக்கு ஏற்றதாகவும் பயனுடையதாகவும் உள்ளது.

1974 மார்ச் 22]

திரு. என். கே. பழனிசாமி: சார், சீஸன் காலங்களிலே இப்பொழுது இருக்கக்கூடிய கட்டடங்கள் போதுமானதாக இல்லாததன் காரணத்தால் அதிகப்படியான வசதிகளைச் செய்து தரக்கூடிய முறையிலே வேறு ஒரு 100 அறைகள் கொண்ட கட்டடத்தைக் கட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது பத்தரை லட்சம் ரூபாய் செலவிலே கட்டப்பட இருக்கிற கட்டடத்திலே ஏற்கனவே இருந்ததுபோக ஏறத்தாழ 192 படுக்கைகள் கொண்ட அறைகளாகக் கட்டப் படுகின்றன. மற்றபடி கட்டவேண்டுமென்றால் அதற்கான நிதி வசதியைப் பொறுத்துத்தான் மேற்கொள்ள வேண்டும். இப்பொழுது நாம் கட்ட இருக்கிற 10 லட்சம் ரூபாயில் அமைய இருக்கிற கட்டடமானது 193 படுக்கைகளைக் கொண்டதாக அமையும்.

திரு. எம். தேவராசன்: தலைவர் அவர்களே, உதகையிலே உள்ள "தமிழகத்திலே" சீஸன்காலங்களிலே எல்லா அறைகளிலுமே நிறையப் பேர்கள் வந்து தங்குகிறார்கள். அதிலே எம்.எல்.ஏ.-க் களுக்கு முன்னுரிமை தரப்படுவதில்லை. முன்பு பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டின்கீழ் அது இருந்தபோது அப்படிப் பட்ட நிலைமை இருந்தது. இப்பொழுது தலைமைச் செயலாள ருடைய கட்டுப்பாட்டில் அது இருப்பதால் எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுவதில்லை. ஆகவே பழையபடி பேரவைத் தலைவருடைய கட்டுப்பாட்டின்கீழ் அதைக் கொண்டு வந்து எம்.எல்.ஏ.-க்களுக்கு முன்னுரிமை கிடைக்கச்செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்கத் துறையின் சார்பாக பொதுப் பணித் துறையினரால் கவனிக்கப் படுகின்ற ஓய்வகங்கள் தவிர மற்றவர்கள் வந்து தங்குவதற்கான ஓய்வகங்கள் வேறு இருக்கின்றன. பயணிகள் வந்து தங்குவதற்காக ஏற்பாடு செய்திருக்கின்ற இடத்திலே முன்னுரிமை கொடுத்தால் இங்கே உள்ளவர்கள் அங்கே போய் 10 நாட்கள், 15 நாட்கள் தங்கிவிடுகிற நிலைமை ஏற்படுமானால் வருகின்ற சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து தங்க முடியாத நிலைமை வரும். தமிழகத்திலேதான் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.